# மினியா (Menia)



**வசிப்பிடம்:** மினியா மக்கள்தொகையை அறிவது கடினமாக இருந்தாலும் மினியா மொழிபேசும் 1,200 ற்கும் மேற்பட்டோர் தெற்கு சிசுவானில் வசிப்பதாக நம்பப்படுகிறது. குறைவானவர்கள் மட்டுமே மூளி மாவட்டத்தில் உள்ள இப்பகுதிக்குள் நுழைந்துள்ளனர். இந்நாட்களிலும் இங்குச் சென்றடைவது கடினம் மற்றும் வெளிநாட்டவர் இப்பகுதிக்குள் நுழைய அனுமதி இல்லை.

**அடையாளம்:** மினியாக்களை அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் இணைத்திருந்தாலும் இவர்கள் சாமெய் இனத்தின் ஒரு பிரிவாகும். சாமெய் இனத்தின் மற்ற பிரிவுகளாவன : மான்யக் மற்றும் ஹொர் (Hor).

**மொழி:** மினியா மொழி திபெத்திய-பர்மிய மொழிக்குடும்பத்தின் ஷியங் துணைப் பிரிவைச் சேர்ந்ததாகும். மினியா மொழியைப்பற்றி முதன்முறையாக எட்வர்ட் கோல்போர்ன் பாபெர் (Edward Colborne Baber) கி.பி. 1881 ல் குறிப்பிடுகிறார். எட்வர்ட் சேகரித்த தகவல்கள் மற்றும் சீனா ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு மொழியியலாளர் ஜாக்சன் சுன் (Jackson Sun) மினியா மொழி அர்சு மொழிக்குழுவைச் சேர்ந்தது எனக் குறிப்பிடுகிறார்.

**வரலாறு:** இம்மொழியை ஆதாரமாகக்கொண்டு பார்த்தால் இவர்களது வம்சாவளி முந்தைய நாட்களில் வடமேற்கு சீனாவில் சுற்றித்திரிந்த சியங் (Qiang) இனத்தோடு தொடர்புடையதைக் காணமுடியும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் அநேக இனங்கள் மிகப்பரந்த சிசுவான் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் சிதறிப்போயின. சில இனங்கள் திபெத்தியர்களோடு கலந்து மறைந்தன சில சீனர்களோடு. மற்ற இனங்கள் (மினியாவோடு சேர்த்து) இன்றைய நாள்வரை தங்கள் மொழிகளைக் காத்துக்கொண்டுள்ளார்கள்; ஆனால் சுற்றியுள்ள மக்களோடு கலாச்சாரத்தில் இருந்த வேறுபாட்டை இழந்தார்கள்.

**பழக்கவழக்கங்கள்:** கி.பி. 1920 ல் மினியா மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்ற ஒரு மேற்கத்திய ஆய்வாளர் இவ்வாறு எழுதினார் "நாங்கள் மூளி நதியின் கரைகளில் கடல் மட்டத்திலிருந்து 8000 அடிகள் உயரத்தில் கூடாரம் அமைத்து தங்கினோம்; இங்கே முதல்முறையாக மூளி கிராமவாசிகளோடு, குறிப்பாகப் பண்டமாற்று முறையில் குதிரையைக் கொடுத்து புல் மற்றும் வாற்கோதுமை வாங்கும் பெண்களோடு அறிமுகமானோம். இவர்கள் தோலாலான மேல் சட்டையும் அடர் சாம்பல் நிற கம்பளி பாவாடையையும் உடுத்தியிருந்தார்கள். இவர்களது நீளமான சடை (இதில் பாதிப் பொய் முடியாயிருந்தது) சிசுவான் மாநிலத்தின் நாணயங்களைக்கொண்டு செய்யப்பட்ட மாலையால் அலங்கரிக்கப்பட்டிருந்தது."

**மதம்:** மினியாக்கள் ஒரு காலத்தில் மூளி புத்த மடத்தின் தலைமை லாமாவாகிய சாமெய்யின் ராஜாவினால் ஆட்சி செய்யப்பட்டார்கள். திபெத்திய புத்த மதம் மினியா மக்களின் சமுதாயப் பழக்கவழக்கங்களில் இன்றும் ஆதிக்கம் செய்கிறது.

**கிறிஸ்துவம்:** மினியாக்கள் மத்தியில் அறியப்பட்டக் கிறிஸ்தவர்கள் யாருமில்லை. இவர்களது நீண்டகால வரலாறு முழுவதிலும் இவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டிராததால் இந்நிலை ஏற்பட்டது. புத்த மதத்தினர் கிறிஸ்துவில் சிறு ஆர்வத்தைக் காட்டினாலும் இவர்கள் ஒரு கடவுள் அல்லது சிருஷ்டிகர் இருப்பதாக நம்புவதில்லை மற்றும் பாவத்தைச் சுய இச்சையில் செய்யப்பட்ட கிரியையாக எண்ணாமல் வெளியுலகில் இருந்து வரும் ஓர் ஆதிக்கமாகவே கருதுகின்றார்கள்.




**Population in China:**
1,200 (1998)
1,250 (2000)
1,540 (2010)
**Location:** Sichuan
**Religion:** Tibetan Buddhism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Munia

**மக்கள்தொகை:** 1,200 (1998 AMO)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஷியங், அர்சு மொழி

**மொழி வழக்குகள்:** 0

**மதம்:** புத்த மதம் மற்றும் பல தெய்வ வழிபாடு

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**

